# திம்புலாகல பிரதேச சபை

## பொலநறுவை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 02 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 26 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் காணப்படுகின்ற என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களை நோக்கில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திம்புலாகல பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிக்க என்னால் முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றன.

| | | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | நிதிக் கூற்றுக்களிலுள்ள விடுபாடுகள் | 08 | 1,399,950 |
| (ii) | நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் கூறல்கள் | 01 | 887,945 |
| (iii) | நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் கூறல்கள் | 02 | 106,442 |

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 ஆண்டு மற்றும் 2 ஆண்டுகளிற்கு மேல் செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி முறையே ரூபா 113,079 மற்றும் ரூபா 365,362 ஆகும்.

### 1.3.3 கணக்கய்விற்கான சான்றுகளின்மை

**தகவல்கள் சமர்ப்பிக்காமை**

கணக்காய்விற்கு தேவைப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் ரூபா 52,369,686 மொத்தமான எட்டு விடயங்கள் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.3.4 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | |
| பிரிவு 153, 155 மற்றும் 160 | கட்டிட நிர்மாணம், மேம்பாலங்கள், பாலங்கள், நீர் வழங்கல் அல்லது வடிகாலமைப்பு அல்லது கழிவகற்றல் போன்ற முறைமைகள் என்பவற்றிற்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகளில் ஒரு சதவீத பிடித்துவைத்தல் வரி அறவிடப்பட்ட அடுத்துவரும் மாதம் 15 ஆந்திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டில் குறித்த கட்டணங்களில் அறவிடப்பட்ட ரூபா |

| | |
|---|---|
| | 44,145 ஆன பிடித்துவைத்தல் வரி 2011 பெப்ரவரி 15 அளவில் கூட அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம்<br>-----------------------------------------------------<br>பிரிவு 19(1)(1) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல அங்கீகாரம் பெறாமல் 3 நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக சேர்க்கப்பட்ட 25 ஊழியர்களிற்கு ரூபா 3,379,409 தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>---------------------------------------------------<br>(i) நிதிப்பிரமாணம் 1645(அ) | மோட்டார் வாகனங்களின் சுத்திகரிப்பு மற்றும் திருத்தங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் கொள்வனவு என்பனவற்றிற்கான ரூபா 728,582 ஐ பதிவதற்காக மோட்டார் வாகனங்களின் லொக் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2007 திசெம்பர் 19 ஆந்திகதிய 1528/21 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமாணியில் வெளியிடப்பட்ட வர்த்தமாணி அறிவித்தல் | (i) பிரதேச சபையின் உத்தியோகபூர்வ பிரயாணத்திற்காக தலைவரின் மாதாந்த எரிபொருள் எல்லை 400 லீற்றர்களாக வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் 252/6532 ஆம் இலக்க டபிள் கப் மோட்டார் வாகனத்திற்காக எல்லையை விஞ்சி 1,036 லீற்றர் டீசல் வழங்கியதற்காக மீளாய்வாண்டில் ரூபா 76,031 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. |

(ii) தலைவர் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் ஒரு மாதத்திற்காக குறிப்பிடப்பட்ட எரிபொருள் எல்லைக்குள் பிரதேச சபையில் மோட்டார் வாகனம் இல்லாத போது தனியார் வாகனம் பயன்படுத்த முடியும். இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் இல்லாமல் சபை நிதியிலிருந்து ரூபா 47,482 தொகையான போக்குவரத்துச் செலவினம் ஏற்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்திற்கு மேலான மீண்டெழும் செலவின மிகை ரூபா 3,303,858 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 17,489,727 ஆக இருந்தது.

### 2.2. வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவற்றின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | குத்தகை வாடகைகள் | 5,243 | 4,826 | 750 | 4,508 | 5,737 | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 528 | 657 | 424 | 487 | 529 | 340 |
| (iii) | ஏனைய வருமானம் | 8,027 | 18,430 | 1,926 | 15,780 | 17,572 | - |

**2.2.2 நீதி மன்றத் தண்டப்பணம்**

2010 திசெம்பர் 31 வரை பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதி மன்னத்தால் அறவிடப்பட்ட ரூபா 11,064,435 தொகையான தண்டப்பணங்கள் சபையால் அறிவிட வேண்டியிருந்தது.

**2.2.3 வரி அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின்படி அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகள் மற்றும் அறவிடுகின்ற வரிகள் நோக்கங்கள் வெளிப்படுத்தல் என்பவற்றினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 ஏனைய வருமானம்**

(அ) 2005, 2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நன்னீர் மீன் விற்பனைக்கான குத்தகை உரிமத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 275,412 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பரப்பில் நகரப் பகுதிகள் மற்றும் வீதியோரங்களில் வெளிப்படுத்தப்பட்ட விளம்பரப் பதாகைகளில் கட்டணங்களை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் முரண்களுடன் சேர்த்து கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 9,734 | 12,214 | (2,480) | 8,818 | 10,034 | (1,216) |
| ஏனையவை | 14,815 | 26,161 | (11,346) | 10,326 | 31,295 | (20,969) |
| உப மொத்தம் | 24,549 | 38,375 | (13,826) | 19,144 | 41,329 | (22,185) |
| மூலதனச் செலவினம் | 589 | 12,589 | (12,000) | 1,431 | 1,355 | 76 |
| முழு மொத்தம் | 25,138 | 50,964 | (25,826) | 20,575 | 42,684 | (22,109) |

மீளாய்வாண்டிற்காக ரூபா 24,548,743 ஆன மதிப்பிடப்பட்ட மீண்டெழும் செலவினத்தின் 56 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 13,827,299 தொகையான மீண்டெழும் செலவினம் ஏற்பட்டிருந்தது.

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ஊழியர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|---|
| (i) | நிறைவேற்றுத் தரங்கள் | 02 | 02 |
| (ii) | துணைநிலைத் தரங்கள் | 12 | 08 |
| (iii) | சிற்றூழியர் தரங்கள் | 13 | 11 |
| (iv) | ஏனையவை (அமைய, சமயாசமய, தற்காலிக) | - | 44 |
| | | 27 | 65 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்

சில சொத்துக்கள் கீழே பகுப்பய்வு செய்யப்பட்டவாறு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகைகள் | அலகு அல்லது அளவுகளின் எண்ணிக்கை | பயனற்ற காலம்- ஆண்டுகள் |
|---|---|---|---|
| (i) | கை உழவு இயந்திரம் இல 75-0892 | 01 | 4 ஆண்டுகளுக்கு மேல் |
| (ii) | மோட்டார் சைக்கிள் இல 159-7115 | 01 | 3 ஆண்டுகளுக்கு மேல் |
| (iii) | அரிசி மா மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உணவுப் பொருள் உற்பத்திக்கான இயந்திரம் | 01 | 2 ஆண்டுகளுக்கு மேல் |

### 2.5.2 பெறப்படவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கணக்கின் பெறுமதி ரூபா 14,270,121 ஆனதுடன் அதில் 1 ஆண்டிற்கு மேலான மீதி ரூபா 441,187 ஆகும்.

### 2.5.3 அறவிடவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த உத்தியோகத்தர் கடன்கள் மற்றும் முற்பண மீதிகள் ரூபா 1,094,930 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாகவுள்ள உத்தியோகத்தர் கடன்கள் மற்றும் முற்பண மீதிகள் ரூபா 4,054 ஆகும்.

### 2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

மின்வலு மற்றும் சக்தி அமைச்சு செயலாளர் அவரது 1988 மார்ச் 16 ஆந் திகதிய பீசீ/பீஈ/12/91 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் சபையின் அதிகார எல்லைக்குள் வீதி விளக்குளின் பேணுகையில் ஏற்பட்ட செலவினங்களில் சில தொகையின் மீளளிப்பு பெறுவதற்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்தகையவாறு மீளாய்வாண்டு வீதி விளக்குகளின் பராமரிப்பில் ஏற்பட்ட ரூபா 657,857 தொகையான செலவினங்களின் எவ்வித மீளளிப்பையும் பெறுவதற்கான சாத்தியம் சபைக்கு இருக்கவில்லை.

### 2.7 செயலாற்றல்

**கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் இன்மை**

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அடுத்துவரும் ஆண்டில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5(i) ஆம் பந்தியின்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த சுற்றறிக்கையின் 5(ii) ஆம் பந்தியின்படி, மீளாய்வாண்டிற்காக சபையின் குறிக்கோள்களை எய்துகையில் நிதி, இலக்கிடப்பட்ட மனித மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றின் முறையான முகாதைத்துவத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் (நிதி மற்றும் பௌதீகம்) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் சோரப்படுகின்றன.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு